
1.




A B C D E

மேற்குறித்த உருக்களிற் காட்டப்பட்டுள்ள ஐந்து விலங்குகளில் இரண்டை மாத்திரம் ஒரு பொது இயல்புக்கேற்ப ஒரு கூட்டமாக வேறுபடுத்தலாம். அவ்விரு விலங்குகளும்

(1) A, C ஆகியனவாகும். (2) B, D ஆகியனவாகும். (3) D, E ஆகியனவாகும்.


2.



மேற்குறித்த உருக்களின் கூட்டத்திற்கு மிகவும் பொருத்தமான உரு யாது?

(1)  (2)  (3) 

3. கீழே தரப்பட்டுள்ள வரிப்படத்தில் ? குறி இருக்கும் இடத்தில் வரவேண்டிய எண் எது?




(1) 20 (2) 24 (3) 32

4. ஒரு சமதள நிலத்திற் குறிக்கப்பட்ட ஒரு சதுரத்தின் மூன்று உச்சிகளில் துமிலன், விமலன், கமலன் ஆகியோர் துமிலனுக்கு வடக்கே விமலனும் விமலனுக்கு மேற்கே கமலனும் என்ற விதத்தில் அமர்ந்திருந்தனர். துமிலனுக்கு எத்திசையில் கமலன் உள்ளான்?

(1) தென்கிழக்கு (2) தென்மேற்கு (3) வடமேற்கு

5. SCHOOL, CLASS என்னும் இரு சொற்களிலும் இருக்கின்ற போதிலும் MUSIC என்னும் சொல்லில் இராத எத்தனை ஆங்கில எழுத்துகள் உள்ளன?

(1) 1 (2) 2 (3) 3

6. விளையாட்டு வீடு பெறுமதி மிக்கது – பாடசாலையில் அறிவைத் தருவது
படிக்கும் வேலை கொடுக்கின்ற – இன்பம் நிறைந்த இடமதுவே

இக்கவிதையில் எதனைப் பற்றிக் கூறப்படுகிறது?

(1) விளையாட்டு வீடு (2) பாடசாலை (3) கற்றலுக்கு உள்ள வேலை

7. முரளியிடம் 1 ரூபாய் நாணயம் ஒன்றும் 10 ரூபாய் நாணயம் ஒன்றும் நிமலனிடம் 2 ரூபாய் நாணயம் ஒன்றும் 5 ரூபாய் நாணயம் ஒன்றும் உள்ளன. முரளியிடமிருந்து நிமலனுக்குக் கிடைக்க முடியாத பணம்

(1) ரூபாய் 5 (2) ரூபாய் 6 (3) ரூபாய் 7

8. ஒரு குடும்பத்தில் இளைய பெண் பிள்ளைக்கு மூன்று சகோதரர்களும் இரு சகோதரிகளும் உள்ளனர். அக்குடும்பத்தில் மூத்த ஆண் பிள்ளைக்கு இருக்கும் சகோதரர்களின் எண்ணிக்கையும் சகோதரிகளின் எண்ணிக்கையும் முறையே

(1) 2, 3 ஆகும். (2) 3, 2 ஆகும். (3) 3, 3 ஆகும்.

[பக். 3 ஐப் பார்க்க


9. அடுத்துள்ள நான்கு மாதங்களில் இருக்கத்தக்க நாட்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை யாது?


(1) 122 (2) 123 (3) 124

10. ஒரு குறித்த மாதத்தில் 6 ஆந் திகதி, 15 ஆந் திகதி, 20 ஆந் திகதி ஆகியவற்றில் இரு நாட்கள் ஞாயிற்றுக்கிழமைகளாகும். எஞ்சியுள்ள நாள்

(1) செவ்வாய் (2) புதன்கிழமை (3) வியாழக்கிழமை

11. ஒரு மேசை மீது உள்ள பல பொருள்கள் பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ளன. அவை எழுத்து A உள்ள பக்கத்திலிருந்து பார்க்கப்படும்போது தோற்றும் விதம் யாது?







(1) (2) (3)



12. சங்கர் தனது வகுப்பில் உள்ள மூன்று நண்பர்களுடன் ஓர் இலந்தை மரத்திலிருந்து 172 இலந்தைப் பழங்களைப் பறித்து வகுப்பில் உள்ள ஏனைய பிள்ளைகளுக்கு அப்பழங்களை 5 வீதம் பகிர்ந்து கொடுக்கும்போது 12 இலந்தைப் பழங்கள் எஞ்சியிருந்தன. சங்கரின் வகுப்பில் உள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 32 (2) 35 (3) 36

13.





மேற்குறித்த உருவில் ? குறி இருக்கும் இடத்திற்கு உகந்த பகுதி யாது?

(1)  (2)  (3) 


14. பின்வரும் உருவில் அம்புக்குறிகளினால் காட்டப்பட்டுள்ள திசையில் சுழலும் மூன்று சில்லுகளின் ஒழுங்கமைப்பு காட்டப்பட்டுள்ளது. சில்லு A ஆனது 4 சுற்றுகள் சுழலும்போது சில்லு B ஆனது 3 சுற்றுகளும் சில்லு C ஆனது 6 சுற்றுகளும் சுழலுகின்றன.





மேற்குறித்த உருவின் அமைவிலிருந்து சில்லு A ஒரு சுற்றுச் சுழலும்போது மற்றைய சில்லுகளின் அமைவு எந்தப் படத்திற் சரியாகக் காட்டப்பட்டுள்ளது?




(1)




(2)





(3)

[பக். 4 ஐப் பார்க்க

**15.** புலமைப்பரிசிற் பரீட்சைக்குத் தோற்றும் 12 மாணவர்களில் 6 மாணவர்கள் வினாத்தாள் I இற்கு 70 இலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 8 மாணவர்கள் வினாத்தாள் II இற்கு 70 இலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இப்பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒரு வினாத்தாளிலேனும் குறைந்தபட்சம் 70 இலும் கூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தால், இரு வினாத்தாள்களிலும் 70 இலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 4 (3) 6


**16.** A, B, C, D எனப் பெயரிடப்பட்டுள்ள நான்கு பொருள்களின் நிறைகளை ஒரு தராசைப் பயன்படுத்தி ஒப்பிடுதல் பின்வரும் உருக்களிற் காட்டப்பட்டுள்ளது.




அதற்கேற்ப, நிறை குறைந்த பொருளிலிருந்து நிறை கூடிய பொருள் வரையுள்ள ஒழுங்குமுறை யாது?

(1) C, A, B, D (2) C, B, A, D (3) D, B, C, A


**17.** ஒரு தடித்த தாளிலிருந்து வெட்டப்பட்ட ஐந்து வடிவங்கள் கீழே தரப்பட்டுள்ளன.




ஒரு செவ்வகத்தைச் செய்வதற்கு அவற்றில் எந்த மூன்று வடிவங்களை அடுத்து வைத்தல் வேண்டும்?

(1) A, B, D (2) A, C, D (3) A, C, E

**18.** உருவில் சதுரமுகி வடிவமுள்ள ஒரு மரக் குற்றியிலிருந்து ஒரு பகுதியை அகற்றிய பின்னர் எஞ்சியுள்ள பகுதி காட்டப்பட்டுள்ளது. அதில் எத்தனை முகங்கள் உள்ளன?



(1) 3
(2) 6
(3) 9

**19.** இரு கோல் துண்டுகளை ஒன்றோடொன்று மூட்டி ஒரு தனித் துண்டைச் செய்வதற்கு 5 நிமிடம் எடுத்தது. அத்தகைய ஆறு கோல் துண்டுகளை ஒன்றோடொன்று மூட்டி ஒரு தனித் துண்டாகத் தயார்செய்வதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?

(1) 25 நிமிடம் (2) 30 நிமிடம் (3) 35 நிமிடம்


**20.** பின்வரும் நிகழ்வுகளை அவை நிகழத்தக்க ஒழுங்குமுறைக்கேற்ப வரிசைப்படுத்துக.

A – பாடசாலைக்குச் செல்லத் தொடங்குதல்
B – வயது 13 இல் பாடசாலைக் கனிஷ்டக் கைப்பந்தாட்டக் குழுவிற் சேர்தல்
C – புலமைப்பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்து வேறொரு பாடசாலைக்குச் செல்லல்
D – தன்னிலும் பார்க்க 2 வயது இளைய சகோதரியின் பிறப்பு
E – தரம் 11 இல் தேசிய மட்டப் பரீட்சைக்குத் தோற்றல்


(1) A, D, C, B, E (2) D, A, C, B, E (3) D, A, C, E, B

[பக். 5 ஐப் பார்க்க

**21.**



மேற்குறித்த உரு நிரையின் கோலத்திற்கேற்ப ? குறிக்குப் பொருத்தமான உரு யாது?



(1) (2) (3)


**22.** ஒரு நிரையின் தொடக்க முனையிலிருந்து 10 ஆவது நபர் நயனா ஆவார். இறுதி முனையிலிருந்து 10 ஆம் நபர் கிருஷ்ணா ஆவார். இவ்விருவருக்கும் இடையே மூவர் உள்ளனர். நிரையில் உள்ளவர்களின் எண்ணிக்கை 23 அல்ல. நிரையில் எத்தனை நபர்கள் உள்ளனர்?

(1) 15 (2) 16 (3) 17


**23.** ரவியின் பிறந்த நாள் விழாவிற்கு வருவார்களென எதிர்பார்த்த நண்பர்களுக்கு அவர் ஒருவருக்கு 10 வீதம் விநியோகிப்பதற்குத் தேவையான புத்தகங்களை எடுத்துக்கொண்டு வந்தபோதிலும் ஒரு நண்பர் வராமையால் வந்திருந்த நண்பர்களிடையே ஒருவருக்கு 11 புத்தகங்கள் வீதம் விநியோகித்தார். அப்போது 3 புத்தகங்கள் எஞ்சியிருந்தன. விழாவிற்கு வந்திருந்த நண்பர்களின் எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 8 (3) 9

**24.**



மேற்குறித்த அடைப்பில் தரப்பட்டுள்ள மூன்று உருக்களுக்கும் மிகவும் பொருத்தமான உரு யாது?




(1) (2) (3)

**25.** ஓர் உடைந்த வாரின் நான்கு துண்டுகள் கீழே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்குமுறையைக் காட்டும் எழுத்து வரிசை யாது?




(1) A, B, D, C (2) C, D, B, A (3) D, C, B, A

**26.** இரு நண்பர்கள் வேறொரு நண்பனின் பிறந்த தின விழாவிற்குச் செல்வதற்கு முன் உரையாடிய விதம் கீழே தரப்பட்டுள்ளது.




இங்கு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான உரையாடற் பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

A – அப்படியென்றால், நாம் ஒரு புத்தகத்தை எடுப்போம்.
B – ஏன் நாம் ஒரு புத்தகத்தை எடுக்கவில்லை?
C – ஓர் உடை நல்லது அல்லவா?

(அ), (ஆ), (இ) ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எழுத்து ஒழுங்குமுறை யாது?

(1) B, A, C (2) B, C, A (3) C, B, A


**27.** மாணவர் குழு ஒன்று பாடசாலைத் தோட்டத்தில் உள்ள பழமரங்கள் தொடர்பாகப் பின்வரும் அட்டவணையைத் தயாரித்தது.

| மரவகை | எண்ணிக்கை |
|---|---|
| மாமரம் | ○ ○ ○ ○ ○ ○ |
| றம்புட்டான் | ○ ○ ○ |
| கொய்யா | ○ ○ ○ ○ ◖ |
| முந்திரி | ○ ○ ○ |
| நாரத்தை | ○ ○ ○ ○ ○ |

இவ்வட்டவணைக்கேற்ப பாடசாலைத் தோட்டத்தில் உள்ள


(1) முந்திரி மரங்களின் எண்ணிக்கை சரியாக 3 ஆகும்.
(2) றம்புட்டான் மரங்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 6 ஆகும்.
(3) மாமரங்களின் எண்ணிக்கை நாரத்தை மரங்களின் எண்ணிக்கையிலும் 1 கூடியதாகும்.

**28.** உருவிற் காட்டப்பட்டுள்ள படத்தில் ஒவ்வொரு வெறும் அடைப்பிலும் 2 தொடக்கம் 6 வரையுள்ள இலக்கங்கள், ஒவ்வோர் இலக்கமும் ஒரு தடவை மாத்திரம் இடப்படுமாறும் எந்தவொரு பகுதியிலும் உள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை 15 ஆக இருக்குமாறும், இடப்பட்டுள்ளன. அதற்கேற்ப 8 உள்ள பகுதியில் ஓர் அடைப்பில் உள்ள ஓர் இலக்கம்




(1) 4 (2) 5 (3) 6


**29.** தொடக்கத்தில் தரப்பட்டுள்ள ஊடுகாட்டும் தாளைக் குற்றிட்ட கோடு வழியே மடிக்கும்போது கிடைக்கும் உரு யாது?



(1) (2) (3)

[பக். 7 ஐப் பார்க்க

30. ஒரே அளவுள்ள சதுரமுகிகளைச் சேர்த்துச் செய்யப்பட்ட ஒரு திண்மம் முன்னால் இருந்து பார்க்கப்படும்போது தோற்றும் விதமும் பின்னால் இருந்து பார்க்கப்படும்போது தோற்றும் விதமும் கீழே தரப்பட்டுள்ளன. இத்திண்மத்தைச் செய்வதற்கு எத்தனை சதுரமுகிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன?



(1) 11

(2) 13

(3) 16

31. மு.ப. 7.00 இற்குப் பயணத்தை ஆரம்பித்த ஒரு புகையிரதம் மல்வத்தைப் புகையிரத நிலையத்தைக் கடந்த பின்னர் 30 நிமிடத்தில் குறுந்துவத்தைப் புகையிரத நிலையத்தைக் கடந்தது. அதற்குச் செப்பமாக ஒரு மணித்தியாலத்திற்குப் பின்னர் அது தல்வத்தப் புகையிரத நிலையத்தை அடைந்தது. பின்னர் தல்வத்த புகையிரத நிலையத்திலிருந்து மு.ப. 10.00 இற்குத் திரும்பும் பயணத்தை ஆரம்பித்து குறுந்துவத்தைப் புகையிரத நிலையத்தையும் மல்வத்தைப் புகையிரத நிலையத்தையும் கடந்து ஆரம்பித்த நிலையத்தை மறுபடியும் அடைந்தது. இப்புகையிரதம் முழுப் பயணத்தின் போதும் ஒரே கதியிற் செலுத்தப்பட்டதெனின், அப்புகையிரதம் பற்றிய பின்வரும் எக்கூற்று சரியானதாக இருக்கும்?

(1) மு.ப. 7.30 இற்குக் குறுந்துவத்தைப் புகையிரத நிலையத்தைக் கடந்தது.

(2) மல்வத்தைப் புகையிரத நிலையத்தை மு.ப. 11.00 இற்குக் கடந்தது.

(3) ஆரம்ப நிலையத்தை மறுபடியும் பி.ப. 12.30 இற்கு அடைந்தது.

32. ⁕ மழை நாளில் மாத்திரம் வானவில்லைக் காணலாம்.

⁕ மழை உள்ள சில நாட்களில் வானவில்லைக் காணலாம்.

மேற்குறித்த இரு கூற்றுகளுக்கும் ஏற்பப் பின்வருவனவற்றில் எது உண்மையாக இருக்கலாம்?

(1) மழை உள்ள ஒவ்வொரு நாளும் வானவில்லைக் காணலாம்.

(2) மழை இல்லாத ஒரு நாளிற்கூட வானவில்லைக் காணலாம்.

(3) மழை உள்ள ஒரு நாளிற்கூட வானவில்லைக் காணமுடியாது.

33. சாந்தி காலை 7.00 இற்குத் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு ஒரு சீரான கதியில் அருணாவின் வீடு வரைக்கும் சென்று அங்கே நிற்காமல் அதே கதியில் திரும்பி வருகின்றார். அருணாவும் காலை 7.00 இற்குத் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு ஒரு சீரான கதியில் சாந்தியின் வீடு வரைக்கும் சென்று அங்கே நிற்காமல் திரும்பி வருகின்றார். இருவரும் ஒரே பாதையிற் சென்றனர். இருவரினதும் வீடுகளுக்கிடையே உள்ள தூரம் 600 மீற்றர் ஆகும். அருணாவின் கதி சாந்தியின் கதியின் இரு மடங்காகும். இப்பயணத்தில் இருவரும் சந்திக்கும் இடங்களிற்குச் சாந்தியின் வீட்டிலிருந்து உள்ள தூரம் மீற்றரில்

(1) 200, 400 ஆகும். (2) 200, 600 ஆகும். (3) 400, 600 ஆகும்.


34. மழை நாளில் வராத எல்லாப் பிள்ளைகளும் பேருந்தில் பாடசாலைக்கு வருபவர்களாவர். அதற்கேற்ப

(1) பேருந்தில் வராத எல்லாப் பிள்ளைகளும் அத்தினத்தில் பாடசாலைக்கு வந்திருந்தனர்.

(2) பேருந்தில் வரும் ஒரு பிள்ளையாயினும் அத்தினத்தில் பாடசாலைக்கு வந்திருந்தது.

(3) பேருந்தில் வரும் எந்தப் பிள்ளையும் அத்தினத்தில் பாடசாலைக்கு வரவில்லை.

35. ஒவ்வோர் உச்சியிலும் ஒரு புள்ளி (•) இருக்குமாறு இப்படத்தில் புள்ளிகளைத் தொடுத்து எத்தனை சதுரங்களை வரையலாம்?



(1) 2

(2) 3

(3) 4

[பக். 8 ஐப் பார்க்க

**36.** சாந்தித் தியேட்டரில் காட்சிப்படுத்தும் திரைப்படம் பற்றிய அறிவித்தல் கீழே தரப்பட்டுள்ளது.

| தினசரி காட்சிப்படுத்தப்படும். | |
|---|---|
| மனோகரா | மு.ப. 10.00<br>பி.ப. 2.00 |
| அருந்ததி | பி.ப. 6.00<br>பி.ப. 9.00 |

இத்தகவல்களுக்கேற்ப பின்வரும் எந்த முடிவுக்கு வரலாம்?

(1) அருந்ததித் திரைப்படத்தின் இரண்டாம் காட்சி நள்ளிரவு 12.00 மணிக்கு முன்னர் முடிவடையும்.

(2) அருந்ததித் திரைப்படத்திற்கு மிகக் குறைந்த காட்சிக் காலம் உள்ளது.

(3) மனோகராத் திரைப்படத்தின் காட்சி நேரம் 3 மணித்தியாலத்திலும் கூடியது.

**37.** ரேவதி நோய்வாய்ப்பட்டு ஒரு மருத்துவரிடம் செல்லும்போது அவளுக்கு 10 மருந்துக் குளிகைகள் 5 மணித்தியாலத்திற்கு ஒரு தடவை ஒரு குளிகை வீதம் விழுங்குமாறு விதிக்கப்பட்டது. அவள் திங்கட்கிழமை மு.ப. 10.00 இற்கு மருந்துக் குளிகைகளை விழுங்கத் தொடங்கினால், அவள் இறுதி மருந்துக் குளிகையை விழுங்குவது


(1) செவ்வாய்க்கிழமை மு.ப. 7.00 இற்கு

(2) புதன்கிழமை மு.ப. 7.00 இற்கு

(3) புதன்கிழமை நண்பகல் 12.00 இற்கு

**38.** அமலன், கமலன், விமலன் என்ற மூன்று மாணவர்களும் சங்கரி, கமலா, சித்திரா என்ற மூன்று மாணவிகளும் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு செவ்வக மேசையைச் சுற்றி உள்ள ஆசனங்களில் மேசையை நோக்கிப் பின்வருமாறு அமர்ந்துள்ளனர்.


* ஒவ்வொரு மாணவனையும் நோக்கி ஒரு மாணவி அமர்ந்துள்ளார்.
* அமலனின் இரு பக்கங்களிலும் மாணவிகள் அமர்ந்துள்ளனர்.
* சங்கரியின் இரு பக்கங்களிலும் மாணவர்கள் அமர்ந்துள்ளனர்.
* கமலாவின் இடப் பக்கத்தில் அமலனும் வலப் பக்கத்தில் சித்திராவும் அமர்ந்துள்ளனர்.



இதற்கேற்ப, சங்கரியை நோக்கி அமர்ந்திருக்க முடியாதவர் யார்?

(1) அமலன் (2) கமலன் (3) விமலன்

**39.** A, B, C ஆகியன முறையே சிவப்பு, மஞ்சள், பச்சை நிறமுள்ள மூன்று மின் குமிழ்களாகும். அக்குமிழ்கள் ஒவ்வொன்றும் ஒளிர்ந்திருத்தல் அல்லது அணைந்திருத்தல் மூலம் ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட சைகைகளை முன்வைக்கலாம். அவ்வாறு அவை முன்வைக்கத்தக்க சைகைகளின் மொத்த எண்ணிக்கை யாது?




(1) 3 (2) 6 (3) 8

**40.** ஒன்பது பிள்ளைகளிடையே இருவர் கறுப்புக் குடைகளையும் மூவர் நீலக்குடைகளையும் நால்வர் சிவப்புக் குடைகளையும் பிடித்துக் கொண்டு நிரையில் நிற்கின்றனர். ஒரு சிவப்புக் குடையைப் பிடித்துக் கொண்டு நிற்கும் ஒவ்வொரு பிள்ளையின் இரு பக்கங்களிலும் நிற்கும் இருவரும் ஒரு கறுப்புக் குடையையும் ஒரு நீலக் குடையையும் பிடித்துக் கொண்டு நிற்கின்றனர். நிரையின் நடுவில் நிற்கும் பிள்ளை பிடித்துக்கொண்டு நிற்கும் குடையின் நிறம் யாது?

(1) கறுப்பு (2) நீலம் (3) சிவப்பு

* * *

Scanned with CamScanner

**1.** பின்வரும் உரைப்பகுதியை வாசிக்குக.

தரம் ஐந்து மாணவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கல்விச் சுற்றுலாப் பயணத்தின் நிறைவல மிருகக்காட்சிச்சாலையைப் பார்வையிட நாங்கள் வந்திருந்தோம். மிருகக்காட்சிச்சாலையினுள் நுழையும்போது வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியை "விலங்குகளைக் தொடச் செல்லவோ அல்லது விலங்குகளுக்கு உணவு வழங்கவோ கூடாது" எனக் கூறினார். மிருகக்காட்சிசசாலையின் உள்ளே நுழைந்ததுமே விலங்குகளின் பல்வேறு ஒலிகளைக் கேட்கக்கூடியதாயிருந்ததுடன் நாங்கள் மெதுவாக முன்னேறிச் சென்றோம். பல்வேறு நிறங்களைக் கொண்ட பறவைகளின் வகைகளையம் மயில்களின் நடனங்களையும் காணும்போது எங்கள் மனதில் முன்னொருபோதுமில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. அதன் பின்னர் பல வண்ண அலங்கார மீன்கள் விசேடமாகக் காணப்பட்ட இடத்தையும் பயங்கரமான ஒலி எழுப்பும் சிங்கம், கரடி ஆகிய மிருகங்கள் உள்ள இடங்களையும் தாண்டி நாங்கள் யானைகளின் விளையாட்டைப் பார்வையிட வந்தோம். அது மிகவும் அற்புதமான காட்சியாக இருந்தது. சுற்றுலாவில் பங்குபற்றியிருந்த பெற்றோர்கள் எங்கள் அனைவருக்கும் வடையுடன் வாழைப்பழமும் வழங்கினர். அனைத்தும் முடிவு அடைந்த பின்னர் அருணனும் வதனியும் வாழைப்பழத்தோல்களைக் கடதாசிப் பையினுள் சேகரித்தனர். அனைவரும் பேருந்தினுள் ஏறிய பின்னர் சுற்றுலாவை ஒழுங்குபடுத்திய ஆசிரியை அனைவருக்கும் நன்றி கூறினார். அதன் பின்னர் நாங்கள் எல்லோரும் மகிழ்ச்சியோடு வீடு நோக்கித் திரும்பினோம்.

- **உரைப்பகுதியைக் கொண்டு விடை எழுதுக.**

(i) மேற்குறிப்பிட்ட பந்திக்கேற்ப சுற்றுலா எந்தத் தரத்திலுள்ள மாணவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது?

.................................................................

(ii) மிருகக்காட்சிச்சாலையினுள் நுழையும்போது வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியை என்ன கூறினார்?

(iii) மாணவர்களின் மனதில் எவற்றைக் காணும்போது மகிழ்ச்சி ஏற்பட்டது?

(iv) இந்தப் பந்தியில் குறிப்பிடப்படும் பயங்கரமான ஒலி எழுப்பும் மிருகங்கள் எவை?

.................................................................

(v) அருணனும் வதனியும் என்ன செய்தார்கள்?

(vi) 'தொடக்கம்' என்பதன் எதிர்க்கருத்துச் சொல் இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது யாது?

.................................................................

(vii) 'ஆகாரம்' என்பதன் ஒத்தகருத்துச் சொல் இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது யாது?

.................................................................

**2.** பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்துக்கும் பொருந்தும் சரியான பயனிலைச் சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

(i) நாங்கள் தினமும் சுத்தமான நீரை ................ (அருந்தினோம். / அருந்துகிறோம். / அருந்துக.)

(ii) அவர்கள் தொலைக்காட்சியை ................ (பார்த்தனர். / பார்த்தோம். / பார்த்தேன்.)

(iii) அது காட்டுக்குள் ................ (ஓடியது. / ஓடின. / ஓடுகின்றன.)

(iv) அவள் வீட்டு வேலையை நன்கு ................ (செய்வார்கள். / செய்வாள். / செய்தது.)

(v) வானத்தில் நட்சத்திரங்கள் ................ (மின்னும். / மின்னுகின்றது. / மின்னியது.)

[பக். 3 ஐப் பார்க்க

3. பின்வரும் ஒவ்வொரு கூற்றுக்கும் பொருத்தமான பெயர்ச்சொல்லை அல்லது வினைச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) அஃறிணை ஒருமை பெயர்ச்சொல் : ...........................

(ii) நிகழ்காலம் பன்மை வினைச்சொல் : ...........................

| மரம், அவர்கள், பூக்கள், ஆடுகின்றாள், ஆடுகின்றார்கள், சென்றது |
|---|

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தையும் நிகழ்காலமாக மாற்றி எழுதுக.

(i) அவர்கள் தமது வேலைகளை விரைவாகச் செய்து முடித்தார்கள்.

(ii) குருவி தனது குஞ்சுகளுக்கு உணவு ஊட்டியது.

5. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுத்துப்பிழைகள் கொண்ட இரண்டு சொற்கள் உள்ள அந்தச் சொற்களை மட்டும் திருத்தி உரிய புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) பாடசாலைக்கு அன்மையில் இருந்த சிறிய கடை இப்போது பெரிய கட்டடமாகியுள்ள

...... ... .............

(ii) எங்கள் விலையாட்டு போட்டியின்போது முதலுதவிக் குளுவினர் உரிய நேரத்தில் வந்த

.. ..... .. ............

6. பின்வரும் மரபுத் தொடர்களுக்குப் பொருத்தமான கருத்தை கீழே தரப்பட்டுள்ள அடைப்புக் இருந்து தெரிவுசெய்து உரிய புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) தட்டிக் கொடுத்தல் ........

(ii) தலை கவிழ்தல் : ...................

| வெட்கமடைதல் / உயர்ச்சியடைதல் / உற்சாகப்படுத்துதல் / அறிவு உண்டாதல் |
|---|

7. பின்வரும் ஒவ்வொரு ஆண்பால் சொல்லுக்கும் உரிய பெண்பால் சொல்லை சொல்லின் எதிரே எழு

(i) அரசன் : ............... (ii) நடிகன் : .. ............


8. இணைமொழியைப் பூர்த்திசெய்க. அக்கம்... .........

9. பின்வரும் சொற்களைப் பொருத்தமாக இணைத்து வாக்கியத்தை மீண்டும் எழுதுக.


பறந்து / குடிக்கிறது / தேனை / நிறைய / தேன் / வயிறு / பூக்களிலுள்ள / சென்று

10. ஒவ்வொரு உருவுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தரப்பட்டுள்ள கட்டினுள் ஆங்கில எழுத்துகளில் எழுதுக.

(i)



(ii)



**11.** பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) before / our / wash / meals / We / hands

..........

(ii) to / Where / visit / you / like / do

..........

**12.** ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

(i) Shoes : .......... (ii) Milk rice : ..........

**13.** 'அஹஸ (අහස)' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

..........

**14.** பின்வரும் வாக்கியத்தைச் சிங்களத்தில் கூறும் முறையைத் தமிழில் எழுதுக.

உங்கள் அம்மாவின் பெயர் என்ன? : ..........

**15.** பின்வரும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.


இருபத்து மூவாயிரத்து எழுபத்து ஐந்து : ..........

**16.** அடைப்பினுள் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி 7 என்ற இலக்கத்தின் பெறுமதி 700 ஆக நான்கு இலக்கங்களைக் கொண்ட மிகச் சிறிய எண்ணை எழுதுக.

| | |
|---|---|
| 5 | 9 |
| 7 | 2 |

: ..........

**17.** உருவில் நிறம் தீட்டப்பட்டுள்ள பகுதியை தசம எண்ணாக எழுதுக.



: ..........

**18.** பின்வரும் எண்களைக் கொண்டு பொது வித்தியாசம் 4 ஆகவுள்ள 5 எண்களைக் கொண்ட ஓர் ஏறுவரிசை எண் கோலத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

10 17 6 13 9 5 21

: ..........

**19.** 2 *l* 500 *ml* பழப்பானம் ஒரு போத்தலில் 500 *ml* வீதம் போத்தல்களில் ஊற்றப்படுகிறது. ஊற்றுவதற்குத் தேவையான மொத்தப் போத்தல்களின் எண்ணிக்கை யாது?

: ..........

**20.** மாநாட்டு மண்டபத்தில் ஒரு வரிசையில் 8 வீதம் 400 கதிரைகள் போடப்பட்டிருந்தன. மண்டபத்தில் இருந்த கதிரைகளின் வரிசைகளின் எண்ணிக்கை யாது?

: ..........

**21.** நுவரெலியாவிலிருந்து பயணத்தை ஆரம்பித்த பேருந்து 5 மணித்தியாலம் 20 நிமிடங்களின் பின்னர் பி.ப 3.45 இற்குக் கொழும்பை வந்தடைந்தது. பேருந்து நுவரெலியாவிலிருந்து பயணத்தை ஆரம்பித்த நேரம் யாது?

: ..........

**22.** பயணி ஒருவர் 15 km 700 m தூரத்தைப் பேருந்திலும் 3 km 500 m தூரத்தைச் சைக்கிளிலும் பயணஞ் செய்தார். அவர் பயணஞ் செய்த மொத்தத் தூரம் எவ்வளவு?

: .......... km .......... m

**23.** 1512 செங்கற்கள் இருக்கும் ஒரு குவியலிலிருந்து 721 செங்கற்களை எடுத்து ஒரு சுவர் கட்டப்பட்டது. எஞ்சியுள்ள செங்கற்களின் எண்ணிக்கை யாது?


: ..........

[பக். 5 ஐப் பார்க்க


**24.** ஒரு மூடையில் 2 kg 500 g அரிசி வீதம் 5 அரிசி மூடைகளில் உள்ள அரிசியின் மொத்த நிறை எவ்வளவு?

: ............ kg

**25.** இந்த உருவில் சமச்சீரச்சை வரைக.



**26.** ஒரு கடையில் நாள் ஒன்றில் விற்கப்படும் பழங்கள் பற்றிய தகவல்கள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளன. இதற்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.




| பழம் | விற்கப்பட்ட பழங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொய்யா | 14 |
| விளாம்பழம் | 07 |
| மாம்பழம் | |
| தர்ப்பூசணி | |

**27.** தீர்க்குக. 15 072 + 6 143 = ............................

**28.** அமலன் ஒன்று 75 ரூபாய் வீதம் 3 மாம்பழங்களை வாங்கினான். அவன் பணத்தைக் கொடுப்பதற்காக ரூபாய் 500 தாளைக் கொடுத்தான் எனில், அவனுக்குக் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

: ............

**29.** ஆரம்பப் பாடசாலை ஒன்றில் தரம் 1 இலிருந்து தரம் 5 வரையுள்ள பிள்ளைகள் பற்றிய தகவல் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| தரம் | ஆண் பிள்ளைகள் | பெண் பிள்ளைகள் |
|---|---|---|
| 1 | 22 | 15 |
| 2 | 18 | 20 |
| 3 | 17 | 17 |
| 4 | 23 | 21 |
| 5 | 19 | 21 |

இந்தப் பாடசாலையில் உள்ள பிள்ளைகளில் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

: ............

- **30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** ஆண்டில் ஒரு காலத்தில் மட்டும் பூக்கும் மலர் வகை எது?
(1) செவ்வந்தி (2) பவளமல்லிகை (3) முள்முருக்கு


**31.** பயிர்ச்செய்கைக்கு இரசாயனப் பசளை இடப்படுகின்றமையால்
(1) மண் கழுவிச் செல்லப்படும்.
(2) மண்ணில் உள்ள அங்கிகள் பாதுகாக்கப்படும்.
(3) குறுகிய காலத்தில் வளமுடைய அறுவடை கிடைக்கும்.

**32.** கடல் மீனை உணவில் சேர்த்துக் கொள்வதனால் உடலுக்குக் கிடைக்கும் போசணைப் பதார்த்தம்
(1) காபோவைதரேற்று (2) விற்றமின் C (3) அயடீன்

[பக். 6 ஐப் பார்க்க.

**33.** கிராமிய விளையாட்டுக்களின் பண்பானது அவை எல்லாம்
(1) களிப்பூட்டுவனபோலவே ஒற்றுமைக்காகவும் இடம்பெறுதல்
(2) உபகரணங்கள் பெருமளவில் தேவையான விளையாட்டுக்களாக இருத்தல்
(3) திறந்தவெளிகளில் மட்டும் நடத்தப்படக்கூடியனவாக இருத்தல்

**34.** ஓர் எரியும் மின்சூள், ஓர் ஆதாரத்திற் பொருத்தப்பட்ட ஒரு பந்து, ஒரு திரை ஆகியவற்றை இருட்டறையில் வைக்கக்கூடிய மூன்று சந்தர்ப்பங்கள் A, B, C எனக் காட்டப்பட்டுள்ளன.




எந்தச் சந்தர்ப்பத்தில் திரை மீது பரந்த நிழலைப் பெறக்கூடியதாயிருக்கும்?
(1) A (2) B (3) C

**35.** வாயின் இரு பக்கமும் புண் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு முக்கிய காரணி போசாக்குக் குறைபாடாகும். அந்தப் போசாக்கு வகை யாது?
(1) விற்றமின் B (2) விற்றமின் D (3) கல்சியம்

**36.** சாதாரண தபாலைப் பயன்படுத்திக் கடிதத்தை அனுப்பும்போது **கட்டாயமாகப்** பின்பற்றவேண்டியது
(1) தனது பிரதேசத்தில் அமைந்துள்ள தபால் அலுவலகத்திலிருந்து மட்டும் கடிதத்தை அனுப்புதல்
(2) கடித உறையில் பெறுபவரின் முகவரியைச் சரியாகக் குறிப்பிடுதல்
(3) கடித உறையில் அனுப்புபவரின் முகவரியைச் சரியாகக் குறிப்பிடுதல்


**37.** மழை வெள்ளம் ஏற்படுவதில் **தாக்கம் செலுத்தாத** காரணி
(1) பல்வேறு மரக்கன்றுகளை நடுதல் (2) மணல் அகழுதல் (3) தாழ் நிலங்களை நிரப்புதல்

**38.** நீரில் வளரும் தாவரமாகிய தாமரை பற்றிய சரியான கூற்று எது?
(1) கரடுமுரடான தண்டு இருத்தல்
(2) இலைகளின் மீது மெழுகுத்தன்மை காணப்படுதல்
(3) எந்தவொரு பகுதியையும் உணவுக்காக எடுத்துக்கொள்ள முடியாதிருத்தல்

**39.** பொறுமையான நடத்தையுள்ள தனிநபரிடம் காணக்கூடிய நற்பண்பு
(1) கோபமான எதிர்வினையைக் காட்டுதல்
(2) எப்போதும் மௌனமாக இருத்தல்
(3) பண்பான வார்த்தைகளைப் பயன்படுத்துதல்

**40.** காயொன்று உருவாகும்போது விரைவில் கருகிவிடும் பாகம் எது?
(1) காம்பு (2) பூவிதழ்கள் (3) புல்லி

**41.** அடைப்பினுள் பாக்குவெட்டி ஒன்றின் உருவம் காட்டப்பட்டுள்ளது. அதில் சுழலும் இடம் எது?
(1) A
(2) B
(3) C




**42.** கைவிரல்களில் நகங்கள் நீளமாக வளருதல் காரணமாக
(1) ஏதாவதொன்றைப் பிடிப்பதற்கு மிகவும் இலகுவாக இருக்கும்.
(2) அவற்றினுள் நோய்க் கிருமிகள் சேருதல் மிகவும் குறைவடையும்.
(3) தனக்குப்போலவே பிறருக்கும் ஆபத்து ஏற்படும்.

**43.** பயற்றம் விதைகளைப் பாத்திகளில் நடுவதற்கு முன்னர் மாணவன் ஒருவனால் பின்பற்றப்பட்ட படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான படிமுறை எது?
(1) விதைகளை நீரில் இட்டு மிதக்கும் விதைகளை நீக்குதல்
(2) விதைகளை மூன்று நாள்களுக்கு நீரினுள் மூழ்க வைத்தல்
(3) நீரில் மூழ்கிய விதைகளை இரண்டு நாள்களுக்கு நன்கு காயவைத்தல்


[பக். 7 ஐப் பார்க்க


44. எவரேனும் ஒருவர் நீரில் வீழ்ந்துவிட்டால் அவர் செய்யக்கூடாதது எது?
(1) இயலுமானவரை நீரின் மேற்பரப்பில் இருப்பதற்கு முயற்சி செய்தல்
(2) நீரின் அடியில் நன்கு மூச்சு எடுக்க முயற்சி செய்தல்
(3) நீரின் மேற்பரப்பில் மிதக்கும் எதையேனும் பிடித்துக்கொள்ள முயற்சி செய்தல்

45. மரங்களின் வேர் தொடர்பான சரியான கூற்று எது?
(1) எல்லா மரங்களுக்கும் ஆணிவேர் உண்டு.
(2) எல்லா மரங்களினதும் வேர் மண்ணில் ஆழமாகச் செல்லும்.
(3) மண்ணில் உள்ள நீரும் பசளையும் வேர்களினால் மரத்துக்கு உறிஞ்சப்படும்.

46. வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்களைப் பார்வையிடுவதற்குச் செல்லும்போது செய்யக்கூடாத செயல் யாது?
(1) சுற்றுலாவுக்கு முன்னர் அந்த இடங்கள் தொடர்பான விபரங்களைத் தேடியறிந்து கொள்ளல்
(2) அந்த இடங்களில் உள்ள சிதைவுகள்மீது நினைவுக் குறிப்புகளைக் குறித்து வைத்தல்
(3) அந்த இடங்களில் உள்ள அறிவித்தற் பலகைகளை வாசித்து அதில் குறிப்பிட்டவற்றைப் பற்றி விளக்கம் பெறுதல்

47. மின்சூள் குமிழ்கள், உலர் கலங்கள், வயர்க் கம்பித் துண்டுகள் என்பவற்றால் தயாரிக்கப்பட்ட I, II என்னும் இரண்டு மின் சுற்றுகளிலும் A ஆனது இழை எரிந்துபோன குமிழாகும். இச்சுற்றுகள் பற்றிய சரியான கூற்று?




(1) சுற்று - I இல் மின்குமிழ் B மட்டும் ஒளிரும்
(2) சுற்று - II இல் மின்குமிழ் B மட்டும் ஒளிரும்
(3) இரு சுற்றுகளிலும் ஒரு குமிழேனும் ஒளிராது

48. பின்வரும் எந்தச் சந்தர்ப்பத்தில் வெப்பம் குறைவடைதல் நிகழும்?
(1) பனிக்கட்டி நீராகுதல் (2) நீர் ஆவியாதல் (3) நீர் பனிக்கட்டியாதல்

49. மோட்டர்ச் சைக்கிளைச் செலுத்தும்போது பின்பற்றவேண்டிய சரியான செயல்
(1) தொலைபேசியைப் பயன்படுத்தியவாறு மோட்டர்ச் சைக்கிளைச் செலுத்தல்
(2) மோட்டர்ச் சைக்கிளில் பயணிக்கும்போது சிறு பிள்ளைகளுக்கும் தலைக் கவசம் அணிவித்தல்
(3) முன்னால் செல்லும் வாகனத்தை முந்திச் செல்வதற்கு இயன்றவரை இடப்பக்கத்தைப் பயன்படுத்துதல்

50. வளர்ந்த பிராணியின் சரீர இயல்பைவிட முற்றாக வேறுபடும் உருவமுள்ள சிறு பருவத்தைக் கொண்ட பிராணி
(1) நாய் (2) வண்ணத்துப்பூச்சி (3) அணில்

51. இரண்டு சமமான கண்ணாடிக் குவளைகளில் 200 *ml* நீர் வீதம் இடப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு பாத்திரத்தில் 20 *g* கட்டி உப்பும் மற்றையதில் 20 *g* தூள் உப்பும் ஒரே நேரத்தில் இடப்பட்டுக் கரைக்கப்பட்டன. அப்போது
(1) தூள் உப்பு விரைவில் கரையும்.
(2) கட்டி உப்பு விரைவில் கரையும்.
(3) தூள் உப்பும் கட்டி உப்பும் கரைதல் சமமான நேர அளவில் நிகழும்.


52. சமூகத்தில் தனிநபர்களின் சில நடத்தைகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - ஏதேனும் நிறுவனம் ஒன்றில் சேவையைப் பெறும்போது ஒருவர் தனது முறைவரும் வரை காத்திருத்தல்
B - பிரதான பாதையில் நடந்து செல்லும்போது இடது பக்கமாக நடந்து செல்லுதல்
C - நீரைப் பயன்படுத்திய பின்னர் நீர்க்குழாயை நன்றாக மூடிவிடுதல்
மேற்குறிப்பிட்ட பண்புகளில் பொறுப்புடைமை உள்ள தனிநபரிடம் காணப்படக்கூடிய சிறந்த பண்புகள்
(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம்

53. கொதிக்கும் நீரில் அவியும் முட்டையைச் சாதாரண நீர் உள்ள சிறிய பாத்திரம் ஒன்றில் இடும்போது அப்பாத்திரத்தில் உள்ள நீரின் வெப்பநிலை
(1) அதிகரிக்கும். (2) குறையும். (3) மாறமாட்டாது.

54. சவர்க்காரம் கலந்த நீருடன் பானம் உறிஞ்சுகுழாயைப் பயன்படுத்தி உருவாக்கும் சவர்க்காரக் குமிழிகளின் உள்ளே நிரம்பி இருப்பது
(1) சவர்க்காரம் (2) நீர் (3) காற்று

[பக். 8 ஐப் பார்க்க

**55.** ஒரு மேசை மீது வைக்கப்பட்டுள்ள ஓர் இரும்பு ஆணியை நோக்கித் தூரத்திலிருந்து A, B, C என்னும் சட்டக் காந்தங்களை ஒரு தடவைக்கு ஒன்று வீதம் கிட்டக் கொண்டுவரும்போது அந்த இரும்பு ஆணி இழுக்கப்படுதல் நடைபெறும் தூரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.




மேலே தரப்பட்டுள்ளவற்றில் காந்தத்தின் சக்தி அதிகமுள்ள காந்தம் எது?

(1) A (2) B (3) C

**56.** வீட்டில் உள்ள பல்வேறு உபகரணங்களைக் கையாளும்போது செய்யும் செயல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - வீட்டைக் கூட்டியதன் பின்னர் தும்புத்தடியைச் சுவர் மூலையில் சாத்தி வைத்தல்

B - ஒருவருக்குக் கத்தியைக் கொடுக்கும்போது பெறுபவருக்குப் பிடி உள்ள பக்கத்தை நீட்டுதல்

C - விளக்குமாற்றின் இரண்டு பக்கங்களும் பயன்படும் வகையில் அதன் பக்கத்தை மாற்றி மாற்றிப் பயன்படுத்துதல்

மேற்குறிப்பிட்ட பயன்படுத்தலில் சரியானது

(1) A உம் B உம் மட்டும் (2) A உம் C உம் மட்டும் (3) B உம் C உம் மட்டும்

**57.** சுத்தமான போசாக்குள்ள புதிய கீரைவகைகளை உணவாகக் கொள்வதற்கு மிகவும் பொருத்தமானது

(1) பாத்திரங்களிலோ, வீட்டுத் தோட்டத்திலோ கீரைவகைகளைப் பயிரிட்டு தேவைக்கேற்றவாறு பயன்படுத்தல்

(2) தினந்தோறும் சந்தையில் தேவையான கீரைவகைகளை வாங்குதல்

(3) ஒரு வாரத்திற்குத் தேவையான கீரைவகைகளை ஒரே தடவையில் வாங்குதல்

**58.** காட்டினுள்ளே ஊன் உண்ணி விலங்குகளைப் பெருமளவில் வெளியிலிருந்து கொண்டு வந்து விடுதல் காரணமாக நிகழக்கூடியது.

(1) காடுகளில் தாவரங்கள் படிப்படியாக அழிவடைதல்

(2) தாவரவுண்ணி விலங்குகளின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்தல்

(3) ஊன் உண்ணி விலங்குகளுக்கு உணவு படிப்படியாகக் குறைவடைதல்

**59.** நோய்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்குப் பேணப்படவேண்டிய சிறந்த பழக்கம்

(1) இனிப்புச் சுவையும் உப்பும் மிக்க உணவுகளை மட்டுப்படுத்தல்

(2) விலங்குகளினால் உண்ணப்பட்ட பழங்களைக் கழுவிய பின்னர் உணவுக்காகப் பயன்படுத்துதல்

(3) நார்ச்சத்துள்ள உணவுகளைக் குறைந்த அளவிற் பயன்படுத்துதல்

**60.** பாடசாலையில் இடம்பெறும் புத்தகக் கண்காட்சியைப் பார்ப்பதற்குக் குமுதினி வந்தபோது பெருமளவிலானோர் அங்கு வந்திருப்பதனைக் காணக்கூடியதாயிருந்தது. கண்காட்சிக் கூடத்தினுள் சென்று பார்வையிட்ட குமுதினியின் மனதில் பெருமகிழ்ச்சி உண்டாகியது. அதற்குக் காரணம் இதுவரை காலமாக அவள் தேடிக்கொண்டிருந்த புத்தகத்தை அங்கு கண்டதனால் ஆகும். உங்களைக் குமுதினி எனக் கருதி அதன் பின்னர் நடந்தவை பற்றி விவரிக்கும் மூன்று வாக்கியங்களை எழுதுக. (எல்லா வாக்கியங்களும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் பிழையின்றி இருத்தல் வேண்டும்.)

(1) ..............................................................................................

(2) ..............................................................................................